அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI
Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com



அ.எண்.117/2015
தேதி.06.07.2016

# அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் நிறுவனர் – தலைவர் ஆர்.சரத்குமார் அவர்களின் ரமலான் நல்வாழ்த்துக்கள்

புனித ரமலான் மாதத்தின் உண்ணா நோன்பு முடிந்து உலகமெங்கும் ரமலான் பண்டிகை உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது. “உழைப்பவர்களின் வியர்வை உலர்வதற்கு முன் அவர்களது கூலியைக் கொடுத்து விடுங்கள்” என்னும் நபிகள் நாயகம் “ஸல்” அவர்களின் நல்வாக்குப்படி, உலகெங்கும் உழைக்கும் வர்க்கம் உயர்வு பெற வேண்டும் என்பதை இந்த புனிதத் திருநாளில் உறுதிமொழியாக ஏற்றுக்கொள்வோம்.

பொய் சொல்லுதல், புறம் பேசுதல், கோள் சொல்லுதல், ஏமாற்றுதல் தவறான வழியில் பொருளீட்டல் போன்றவை தவிர்க்கப்பட வேண்டும் போன்ற ரமலான் மாத நோன்பு காட்டும் அறநெறிகள் அனைத்து மதத்தினரும் பின்பற்றப்பட வேண்டிய நெறிகளாகும். பண்டிகைகள் மதம் சார்ந்த நிகழ்ச்சிகளாகப் பார்க்கப்படாமல் மனங்களை இணைக்கும் நிகழ்ச்சிகளாக, மதம் சார்ந்த பேத உணர்வுகளைப் போக்கும் புனித நன்னாளாம் ரமலான் திருநாளில் மத, இன, மொழி வேறுபாடுகளைக் கடந்து உலகெங்கும் சகோதரத்துவம், சமத்துவம், சமாதானம் தழைத்தோங்கச் செய்திடும் நிகழ்ச்சியாக அமைத்திடுவோம்.

இந்நன்னாளில் இஸ்லாமிய சகோதர சகோதரிகளுக்கு ரமலான் நல்வாழ்த்துகளைச் சொல்லி, அவர்களது மகிழ்ச்சியில் நாமும் பங்கேற்போம். உலகெங்கும் உள்ள இஸ்லாமிய சொந்தங்களுக்கு என் சார்பிலும், சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும் இனிய ரமலான் நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்
உழைப்பவரே உயர்ந்தவர்
என்றும் அன்புடன்

ஆர்.சரத்குமார் B.Sc
தலைவர்